

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், சென்னை, வில்லிவாக்கம், பாடி மேம்பாலத்தின்கீழ், சிவசக்தி காலனியில் சுமார் 3.93 ஏக்கர் பரப்பளவில் 53.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அமைக்கப்படவுள்ள சர்வதேச தரத்திலான கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கன்னிகாபுரம் பகுதியில் 59 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தனி கட்டடங்கள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளுக்கு குடிநீர் குழாய் மூலம் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ. வெற்றியழகன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் செ. சரவணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், ஆர்.கே.நகர் தொகுதிக்குட்பட்ட தண்டையார்பேட்டையில் 21.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில், ஸ்டான்லி மருத்துவமனை சாலையில், 3.12 ஏக்கர் நிலப்பரப்பில் வாகன நிறுத்தும் தளம் மற்றும் 9 தளங்களுடன் 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு தொகுதிகளாக கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஆட்சியர் மரு.ச.உமா, ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ., வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி., எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்!

## ஓமலூர் - சங்ககிரி - திருச்செங்கோடு - பரமத்தி சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி!

### அமைச்சர் எ.வ.வேலு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்!

நாமக்கல், பிப்.1-

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகராட்சி, கரட்டுப்பாளையத்தில் ஓமலூர் -சங்ககிரி - திருச்செங்கோடு - பரமத்தி சாலையை கடின புருவங்களுடன் கூடிய இருவழிச்சாலையில் இருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்காக அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்ட குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ. ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி. எஸ்.மாதேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு ஓமலூர்-சங்ககிரி-திருச்செங்கோடு-பரமத்தி சாலையை கடின புருவங்களுடன் கூடிய இருவழிச்சாலையில் இருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்காக அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

திருச்செங்கோடு என்பது "ஆணும் பெண்ணும் ஒன்று தான்" என்னும் தத்துவத்தை வெளிப்படுத்தும் ஆன்மீக மண். கலைஞர் அவர்களும் "ஆணுக்கு பெண் நிகர்" என்பதை வலியுறுத்தி சொத்தில் சம உரிமை பெற்றுத் தந்தவர். அமெரிக்க அதிபர் பாராளுமன்றத்தில் பேசும் போது அமெரிக்காவின் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றதற்கு முழுமுதற்காரணம் நெடுஞ்சாலை துறை சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளதே ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில், தமிழ்நாட்டின் சாலைகள் சிறப்பாக வளர்ச்சி பெற்றால் தான் தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெற இயலும். சாலைகள் வளர்ச்சி பெற்றால் தான் வேளாண் உற்பத்தி பொருளை சந்தைப்படுத்த இயலும். தொழிற்சாலை உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த சாலை வளர்ச்சி என்பது மிகவும் இன்றியமையாததாகும்.

#### பொருளாதார வளர்ச்சிக்கு சாலை வசதி முக்கியம்!

வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டுமென்றால் விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து மூலம் தான் பயணிக்க முடியும். அந்த வகையில் விமானம் மற்றும் போக்குவரத்து வசதியைப் பெற சாலை மிகவும் முக்கியமான ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் "அமெரிக்க அதிபர் கென்னடி" கூறியது போல், பொருளாதார வளர்ச்சிக்கு சாலை முக்கியம் என்பதன் அடிப்படையில், முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.

இத்திட்டத்தின் கீழ், மாவட்ட மற்றும் தாலுகா தலைமையகங்களை இணைக்கும் முக்கியமான மாநில நெடுஞ்சாலைகள் 2200 கிமீ நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக விரிவுபடுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2021-22 ஆம் நிதியாண்டில் 253.62கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

2022-23 ஆம் நிதியாண்டில் 157.10கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. 2023-24 ஆம் நிதியாண்டில் 166.22கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. 2024-25 ஆம் நிதியாண்டில் 254.32கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

#### 57 பணிகளுக்கு ரூ.154 கோடி நிதி ஒதுக்கீடு!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நாமக்கல் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் நெடுஞ்சாலை துறை சார்பில் 227 பணிகள் 412 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் 57 பணிகளுக்கு ரூ.154 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

நெடுஞ்சாலைத் துறையின் கிராம சாலைகள் அழகு சார்பில் நாமக்கல் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.67 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய சாலைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் 37 சாலை பணிகளுக்கு ரூ.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அருள்மிகு நைனாமலை வரதராஜர் திருக்கோவிலுக்கு பக்தர்கள் சென்று வர மண்சாலை அமைக்கப்பட்டு வந்த நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கப்படும் என அறிவித்தார்கள். இந்த அறிவிப்பின்படி சாலை அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான கொல்லிமலையில் விபத்துகளை குறைக்க ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் முறையில் சிறப்பு தடுப்பான்கள் அமைக்கப்பட்டுள்ளன.

#### தரைமட்ட பாலங்கள் தரம் உயர்த்த உத்தரவு!

நாமக்கல் புறவழிச்சாலை ரூ.207 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்ற வருகின்றன. அதே போன்று திருச்செங்கோடு புறவழிச் சாலை ரூ.124 கோடி மதிப்பீட்டில் நடைபெற்ற வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள 1281 தரைமட்ட பாலங்களை தரம் உயர்த்த உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 10 தரைமட்ட பாலங்கள் ரூ.29 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

முன்னதாக, திருச்செங்கோடு நகர் புறவழிச்சாலை பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், திருச்செங்கோட்டில் நெடுஞ்சாலைத் துறை சார்பில், சாலை ஓரங்களில் மரக்கன்றுகளை நடும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நகரக் கழக செயலாளர் தா.கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர் ஜி.தங்கவேல், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் கு.கோ.சத்தியபிரகாஷ், திருச்செங்கோடு நகராட்சி தலைவர் நளினி சுரேஷ்பாபு, நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் தொழில்நுட்பம் இரா. சந்திரசேகர், சேலம் நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர், (க&ப) சி.சசிக்குமார், திருச்செங்கோடு நகர்மன்ற உறுப்பினர் முருகேசன், நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் நாமக்கல்கே.ஆர்.திருகுணா உட்பட பல துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (31.01.2025) திருச்செங்கோடு நகர் புறவழிச்சாலை பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நகரமைப்பு மண்டல திட்ட குழு உறுப்பினர் எஸ். எம்.மதுரா செந்தில் உட்பட பலர் உள்ளனர்.

### அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்!

## ரூ.62 கோடியை விடுவித்து அரசாணை வெளியீடு!

சென்னை, பிப். 1 -

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு 62 கோடி ரூபாயை விடுவித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அனைத்து குக்கிராமங்களும் முழுமையாக, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி அடைவதை உறுதி செய்யும் விதமாக, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞரின் கனவுத் திட்டமான இந்த திட்டத்தின் மூலம் நீர்நிலைகள் புதுப்பிப்பு, தெருக்கள் அமைத்தல், மயான வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த நிலையில், நடப்பாண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை செயல்படுத்த, தமிழ்நாடு அரசு ஆயிரத்து 147 கோடியே 28 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது.

இந்த நிலையில், நடப்பாண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு கடைசி தவணையாக 62 கோடியே 50 லட்சம் ரூபாய் விடுவித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

### நெல்லை மத்திய மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்! – தீர்மானங்கள் நிறைவேற்றம்!

## பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தரும் முதல்வருக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

### மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று ஆலோசனை!

நெல்லை, பிப்.1

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பிப்ரவரி 6 மற்றும் 7 தேதிகளில் நெல்லை மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் மற்றும் கழக நிகழ்ச்சிகள் கலந்து கொள்வதற்காக வருகை தர உள்ளார்கள்.இது தொடர்பாக நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அரங்கில் மாவட்ட அவை தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் வருகிற பிப்ரவரி 06.02.2025, 07. 02.2025 ஆகிய இரு தினங்கள் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நெல்லைக்கு வருகை தரும் கழகத் தலைவர் திராவிட மாடல் முதலமைச்சர் அன்பு தலைவர் அவர்களுக்கு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளித்திடவும் அதேபோல் அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் திரளான பொதுமக்களும், கழகத் தோழர்களும் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும்.என இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.எல். எஸ். லெட்சுமணன், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், தீர்மானக்குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில பொறியாளரணி துணைச் செயலாளர் ராஜவர்மன், மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன், எஸ்.வி. சுரேஷ், கிரிஜாகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் துணை மேயர் ராஜ், முன்னாள் மேயர் சரவணன், நடராஜன், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்) அன்டன் செல்லத்துரை(பாளை) மானூர் ஒன்றிய செயலாளர்கள் மாரியப்பன், அருள் மணி, அன்பழகன், பேரூர் செயலாளர் செல்வ பாபு சங்கர் நகர், மாநகரப் பொருளாளர் அண்ணாதுரை, முன்னாள் மாவட்ட பொருளாளர் அருண்குமார், மாநகர துணை செயலாளர்கள் அப்துல் கையூம், சுதா மூர்த்தி, மண்டலத் தலைவர்கள் பிரான்சிஸ், கதீஜா இக்லாம் பாசிலா,

மாவட்ட அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், பொன்னையா பாண்டியன், கருப்பசாமி என்ற செல்வம், நெளஷாத், ராஜகுமாரி, பாலசுப்பிரமணியன், தொப்பி மைதீன், தகவல் தொழில் பணி ஒருங்கிணைப்பாளர் துரை.சக்தி சீதா, அனிதா, காமினிதேவன், சின்னத்துரை, மாநகர அணி அமைப்பாளர் நெல்லை முருகன், அந்தோணி செபஸ்டியான், இம்மானுவேல், மகாராஜன், மேரி, நச்சி னார்கினியன், தளபதி ஆறுமுகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மீரான்மைதீன், மிக்கேல், மாவட்ட பிரதிநிதி வேல் பாண்டியன், கார்டன் சேகர், வேங்கை வெங்கடேசன், வட்டச் செயலாளர்கள் முறுக்கு சாகுல், பத்மராஜ், தென்கரை முத்து, ராஜ், கதிரேசன், ரகுமத்துல்லா, லெனின் மகேஷ், ராபர்ட்செல்லையா, சுந்தராஜன், சிந்து முருகன், சேக் மன்சூர், அருள் இளங்கோ, ஐயப்பன், தொப்பி காஜா, ஆறுமுக பாண்டியன், செல்வக்குமார் கிங் பாலா, ஆறுமுகம், மேகை செல்வம், பாப்பு குமார், மனோகரன், ஆவின் கல்யாணி, வினோத் குமார், சடாமணி, பிரான்சிஸ், வேல்முருகன், செய்யது மைதீன், ஆனந்த பெருமாள், அந்தோணி, மாரிமுத்து, அலி சேக் மன்சூர், முத்துராம் சாலி மௌலானா, மணிகண்டன், கதிரேசன், செந்தில் முருகன், படப்பை மனோகரன், பிரேம் கணேசன், மெடிக்கல் பாஸ்கர், பட்சி ராஜன், ஜெயின்உசேன், தளவாய் இசக்கி, மகளிர் அணி நிர்வாகிகள் ஹமீதா, தேவிகா, ஜோதி பிரியா, மாலதி செல்லதுரை, லதா, துணை அமைப்பாளர் எல்ஐசி பேச்சி முத்து, கழகப் பேச்சாளர் மில்க் குமார், செந்தில் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

வருகிற பிப்ரவரி 6 மற்றும் 7 ஆகிய இரு தினங்கள் பல்வேறு அரசின் நிகழ்ச்சிகள் மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நெல்லை வருகை தரும் கழகத் தலைவர் திராவிட மாடல் முதலமைச்சர் அன்பு தலைவர் அவர்களுக்கு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் சிறப்பான வரவேற்பு அளித்திடவும் அதேபோல் அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் திரளான பொதுமக்களும், கழகத் தோழர்களும் கலந்து கொண்டு சிறப்பித்திட இக்கூட்டம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



சென்னை விமான நிலையத்தில் நேற்று (31.01.2025) இந்திய குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் அவர்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வரவேற்றார். பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி என். சிவா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.